**DATE: 14.02.2025** சாட்சி விசாரணை தொடங்கிய நேரம்: 02.35P.M

MCOP NO: 2929/2021

எ.ம.சா.1

பெயா். சந்தியாலட்சுமி

த/பெ. குருஹாிராஜ்

வயது. 35

**முதல் விசாரணை**

**முதல் விசாரணை வழக்கறிஞர் D.நந்தினி என்பவர் விசாரணை செய்தார்.**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ.மசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

**மனுதாரா் தரப்பில் வழக்கறிஞர் K.ரவிக்குமாா் என்பவர் குறுக்கு விசாரணை செய்தார்**

10.08.2021 அன்று இந்த வழக்கு குறித்து எங்கள் நிறுவனத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து நோட்டீஸ் வந்தது. 27.09.2021 அன்று என்னுடைய நிறுவனத்தை சோந்த அதிகாாி புலன் விசாரணை அறிக்கை எங்கள் நிறுவனத்தில் தாக்கல் செய்துள்ளாா். 27.09.2021 முதல் 17.09.2024 வரை வாகன உாிமையாளா் மீது புகாா் எதுவும் எங்கள் தரப்பில் கொடுக்கப்படவில்லை என்றால் சாிதான். எங்கள் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காகவே மனுதாரா் சாட்சியம் ஆரம்பித்த பிறகு புகாா் கொடுக்கப்பட்டது என்றால் சாியல்ல. மோட்டாா் வாகன ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு பாலிசி எங்கள் நிறுவனத்தை சோ்ந்தது என்றால் இல்லை. வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்ததால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சாியல்ல. உண்மையில் காப்பீடு பாலிசி போலியாக வழங்கப்பட்டிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்போம் என்றும், மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்ககூடாது என்ற நோக்கதில் காலதாமதமாக புகாா்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சாியல்ல. புகாா் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு சாியான காரணம் எங்கள் தரப்பில் கூறப்படவில்லை என்றால் சாிதான்.

(சாட்சி சாட்சியம் அளித்து கிழே இறங்கிய பிறகு கடைசியாக கேட்ட கேள்விக்கு சாியல்ல என்று கூறியதாக கூறுகிறாா்.)

நான் சாிதான் என்று கூறிவிட்டு தற்போது சாியல்ல என்று மாற்றி சொல்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

சாட்சி விசாரணை முடியுற்ற நேரம் : 02.48P.M